DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.85/2018**

**prosecution witness: PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**A4 present. Others absent. Petition filed and allowed.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : காளிதாஸ் | ஜாதி | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**26.03.2025**

**குறுக்கு விசாரணை :-**

வழக்கு சம்பவம் சம்பந்தமாக எனக்கு தகவல் சொல்லும்போது நான் வனச்சரக அலுவலகத்தில் இருந்தேன். இது சம்பந்தமாக எனக்கு தகவல் யார் சொன்னார் என்றால் வனச்சரகர் திரு.சதீஷ் என்பவர் தான் தகவல் சொன்னார். வனக்காப்பாளர் ராதா அந்த நேரத்தில் அலுவலகத்தில் இல்லை என்றால் அவர் எங்கள் அலுவலகத்தில் தான் இருந்தார். ஆனால் அவர் அந்த சமயத்தில் உச்சிப்புளி பீட்டில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இருந்து கிளம்பும்போது மணி என்ன இருக்கும் என்றால் 10 முதல் 15 நிமிடத்தில் சம்பவ இடம் சென்றுவிட்டோம். சம்பவ இடத்திற்கு சென்றவுடனே வத்தையை பார்த்துவிட்டோம். கரையில் இருந்து 15 மீட்டரில் ஆற்றுக்குள் சம்பவம் நடைபெற்றது. நாங்கள் சுமார் 10 பேர் சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் அனைவரும் கரையில் இருந்து ஆற்றுக்குள் தான் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் 10 பேர் சம்பவ இடத்தில் இருந்து ஆற்றுக்குள் சென்றிருந்தால் சம்பவ இடத்தில் இருந்து யாரும்தப்பித்து செல்லமுடியாது என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை நேராக சம்பவ இடத்தில் இருந்து வனச்சரக அலுவலகம் கொண்டு சென்றோம். வழக்கு சொத்துக்களை எதில் ஏற்றினோம் என்றால் வத்தையை ஒரு டிராக்டரில் ஏற்றி சென்றோம். அந்த டிராக்டர் எண் தெரியுமா, வண்டி ஓட்டுநர் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கடல் அட்டைகள் இருந்த 35 பைகளை எதில் ஏற்றி அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. வத்தை, வழக்கு

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.03.26 17:29:28 +0530

சொத்துக்களை சம்பவ இடத்தில் கைப்பற்றததால் ஞுபாகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு போலீசார் நாங்கள் வழக்கு சொத்தை கைப்பற்றி அலுவலகம் கொண்டு சென்ற முன்பா, பின்பு வந்தார்களா என்றால் நாங்கள் அனைவரும் வழக்கு சொத்துக்களுடன் வனச்சரக அலுவலகம் சென்றபின்பு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து கேள்விபட்டு திரும்ப வனச்சரகர் உட்பட சம்பவ இடத்திற்கு வந்தோம். போலீசார் வரும்போது சம்பவ இடத்தில் வழக்கு சம்பந்தப்பட்ட தடயங்கள் எதுவும் அங்கு இல்லை என்றால் சரிதான். நாங்களும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தபின்பு தான் சம்பவ இடத்திற்கு வந்தோம். 2 வது சம்பவ இடத்திற்கு எங்கிருந்து கிளம்பினோம் என்றால் முதல் சம்பவ இடத்தில் இருந்து கிளம்பினோம். 2 வது சம்பவ இடத்திற்கு போகும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் பகல் சுமார் 1.30 மணி இருக்கும். 2 வது சம்பவ இடத்தில் வழக்கு சொத்துக்களை தவிர வேறு ஆட்கள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

எந்த சம்பவ இடத்தில் வைத்து அ.சா.ஆ.3 பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் 2 வது சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அ.சா.ஆ.3 பார்வை மகஜரை யார் தயார் செய்தது என்றால் நான் தான் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் எத்தனை பக்கம் என்றால் மூன்று பக்கம் ஆகும். அது 2 வது சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். பார்வை மகஜரில் இரண்டு சம்பவ இடங்களில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் தயார் செய்யும்போது முதல் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் அருகில் இல்லை என்றால் சரிதான். ஒவ்வொரு சாக்கிலும் எத்தனை கிலோ இருந்தது என்று தனித்தனியாக எடை போட்டு பார்த்து சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை சொல்லவில்லை மொத்தம் 400 கிலோ இருந்தது. வழக்கு சொத்துக்களை அலுவலகத்தில் வைத்து தான் எடைபோட்டு பார்த்தோம் என்றால் சரிதான். பார்வை மகஜரை 2 வது சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 08.01.2017 ம் தேதியிட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.வனச்சரகர் சதீஷ் அவர்கள் என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது என்று 09.01.2017 ம் தேதியிட்டு கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு தோததாக மிகைப்படுத்தி எங்கள்அலுவலகத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்னவிதத்தில், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், வழக்கு சொத்துக்களை சம்பவ இடங்களில் வைத்து கைப்பற்றவில்லை என்றாலும், எங்கள் வனச்சரக மிகைப்படுத்தி வழக்கு சங்கதிகளை தயார் செய்துள்ளார் என்றாலும், அதற்கு தோதாக உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் எனக்கு எதுவும் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். வேட்டை தடுப்பு காவலர் முனீஸ் பிரசாத் தாக்கப்பட்டதற்கு மருத்துவ சிகிச்சை எடுத்தார். அவரை சாட்சியாக விசாரித்தால் இந்த வழக்கின் உண்மை தன்மை தெரிய வரும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சொன்ன மாதிரி சம்பவ இடத்தில் வைத்து எதிரிகள் யாரையும் பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை பிடித்து விசாரிக்கும்போது 50 நபர்கள் ஒன்று சேர்ந்து தாக்கினார்கள் என்று சொல்வது வழக்கில் மிகைப்படுத்தி

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.26 17:29:34 +0530

சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.26 17:29:39 +0530

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.85/2018**

**prosecution witness: PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**A4 present. Others absent. Petition filed and allowed.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ராதா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>26.03.2025</u>

<u>குறுக்கு விசாரணை :-</u>

நான் சம்பவ காலத்தில் உச்சிப்புளி பீட்டில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். உச்சிப்புளி பீட் அலுவலகம் எங்குள்ளது என்றால் மண்டபத்தில் உள்ளது. நான் தகவல் வரும்போது மண்டபம் ரேஞ்சர் ஆபிசில் இருந்தேன். நானும், வனக்காப்பாளர் காளிதாசும் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவ இடம் ஆத்துக்கரையில் மணற்பகுதியில் வைத்து பார்த்தோம் என்றால் சரிதான். நாங்கள் சுமார் 20 பேர் சென்றிருப்போமா என்றால் சுமார் 12 பேர் சென்றிருப்போம். நாங்கள் எவ்வளவு துாரத்தில் செல்லும்போது அவர்கள் ஓடினார்கள் என்றால் பார்வைக்கு எட்டிய துாரத்தில் செல்லும்போது அவர்கள் ஓடிவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை எங்கு வைத்து போட்டேன் என்றால் 2வது சம்பவ இடத்தில் வைத்து போட்டேன். வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு அதன்விபரத்திற்கு பார்வை மகஜர் தயார் செய்வதுதான் என்றால் சரிதான். நாங்கள் முதல் சம்பவ இடத்தில் பிடிக்கப்பட்ட பொருள்களுடன் இரண்டாவது சம்பவ இடத்திற்கு சென்று அங்கு 2வது சம்பவ இடத்தில் பிடிக்கப்பட்டபொருள்களையும் மொத்தமாக வைத்து இந்த பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது. இரண்டு சம்பவ இடங்களுக்கு சென்று விட்டு அலுவலகம் சென்றோமா என்றால் முதல் சம்பவம் முடிந்தும் அலுவலகம் சென்றோம். இரண்டாவது சம்பவம் முடிந்தும் அலுவலகம் சென்றோம். 2வது சம்பவ இடத்திற்கு தான் போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் அங்கு வருமபோது முதல் சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. முதல் சம்பவத்தில் என்னை யாரும் தாக்கவில்லை, நான் எதுவும்

சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. முதல் சம்பவத்திற்கு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் எல்லாம் அநாமத்தாக கிடந்ததை வைத்து எங்கள் வனச்சரகர் மிகைப்படுத்திய சங்கதிகளை கூறி அதற்கு தோததாக ஆவணங்கள் எல்லாம் பின்னிட்டு அலுவலகத்தில் வைத்து தயார் செய்தார் என்றாலும், நாங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடங்களுக்கு ரோந்து எதுவும் செல்லவில்லை என்றாலும, வழக்கு சொத்துக்கள் எதையும் சம்பவ இடத்தில் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிகள் யாரையும் சம்பவ இடத்தில் வைத்து பிடிக்கவில்லை என்றாலும், நான் வனச்சரகர் மிகைப்படுத்தி தாக்கல் செய்த வழக்கிற்கு தோததாக உண்மைக்கு மாறாக சாட்சிமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆவணங்களில் போட்டுள்ள கையெழுத்து பின்னிட்டு அலுவலகத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.